# அருள்மிகு கூடலழகர் திருக்கோயில், மதுரை நகர்.

**ந.க.எண்.. 83/2022/அ4 நாள்.. 06.05,2022**

## பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மதுரை, அருள்மிகு கூடலழகர் திருக்கோயிலில் 1432ம் பசலிக்கான பலவகை உரிம இனத்திற்கான பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பு **23.05.2022 திங்கட்கிழமை** அன்று பிற்பகல் **3.00 மணியளவில்** அறநிலையத்துறை உயர் அலுவலர்கள் முன்னிலையில் இத்திருக்கோயிலில் நடைபெறவுள்ளது. விருப்பமுள்ளவர்கள் பின்வரும் பட்டியலில் கண்டுள்ளவாறு டெபாசிட்தொகையினை செலுத்தி கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1) ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கும் காலம் : 23.05.2022 பிற்பகல் 2.30 மணி வரை

2)ஒப்பந்தப்புள்ளி திறப்பு/பொது ஏலம் நாள் : 23.05.2022 பிற்பகல் 3.00 மணி முதல் தொடர்ந்து நடைபெறும்.

| வ எண் | உரிம இனங்கள். | உரிம காலம் | முன்வைப்புத் தொகை ரூ. பை |
|---|---|---|---|
| 1. | தேங்காய், பழம் மற்றும் பூஜைப்பொருட்கள் விற்பனை உரிமம் | 01.07.2022 முதல் 30.6.2023 முடிய | 5,00,000.00 |
| 2. | பிரசாத விற்பனை உரிமம் | | 15,00,000.00 |
| 3. | பக்தர்களின் ஊர்திகள் பாதுகாப்புக் கட்டணம் வசூல் உரிமம். | | 10,00,000.00 |
| 4. | துலாபாரம் காணிக்கை பொருட்கள் சேகர உரிமம். | | 2,00,000.00 |
| 5. | நவகிரக சன்னதிமுன் எள்ளுச்செண்டு நெய்தீபம் விற்பனை உரிமம் | | 10,00,000.00 |
| 6. | அ.மி.மங்கள ஆஞ்சநேயர் திருக்கோயில் துளசி, பூமாலை, வெற்றிலைமாலை மற்றும் நெய்தீபம் விற்பனை செய்துகொள்ளும் உரிமம் | | 1,25,000.00 |

### பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி/ விளம்பரம்.
### பொது நிபந்தனைகள்.

1) ஒப்பந்தப்புள்ளி/பொதுஏலத்தில் கலந்து கொள்பவர்கள் மேற்கண்ட பட்டியல்படி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மதுரை, தெற்கு மாசி வீதி கிளையில் மாற்றத்தக்க கேட்பு வரைவோலையினை (Demand Draft) உதவி ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு கூடலழகர் திருக்கோயில், மதுரை–1 என்ற பெயரில் வைப்புத் தொகையைச் செலுத்த வேண்டும். இந்துக்கள் மட்டும் இதில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

2) ஒப்பந்தப்புள்ளியிலும், பொதுஏலத்திலும் கலந்துகொள்பவர்கள் ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியே கேட்பு வரைவோலை எடுத்து அதன் நகலினை ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். **23.05.2022 திங்கட் கிழமை அன்று** பிற்பகல் **2.30 மணிக்கு** பின்னர் வரும் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்படமாட்டாது.

3) உரிமகாலம் : 01.07.2022 முதல் 30.6.2023 வரை மட்டுமே.

4) ஒப்பந்தப்புள்ளி/பொதுஏலம் நடவடிக்கை முடிவுற்றவுடன் உரிமைத்தொகை முழுவதும் தலத்திலேயே உடனே செலுத்த வேண்டும்.

5) உரிமத்தொகை ஸ்தலத்திலேயே செலுத்தத் தவறினால், டெபாசிட் தொகை பரிமுதல் செய்யப்பட்டு, ஏலம்/டெண்டர் ரத்து செய்யப்படும். ஏலம்/டெண்டர்தாரர் மேற்கொண்டு இத்திருக்கோயில் மற்றும் பிற திருக்கோயில்களில் நடைபெறும் ஏலங்களில் கலந்துகொள்ள முடியாதபடி தவறிழைத்தோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு (Black list) அனைத்து திருக்கோயில்களுக்கும் தபால் அனுப்பப்படும்.

6) உயர்ந்த கேள்வி கேட்டு உரிமம் பெற்ற உரிமதாரர் தம் செலவில் ரூ.20/–க்கான முத்திரைத்தாளில் 1432ம் பசலி ஓராண்டுக்கான ஒப்பந்தப்பத்திரம் எழுதித் தர வேண்டும்.

7) பொது ஏலம் உயர்ந்த கேள்வியுடன் நிறுத்திக்கொண்டு ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும். பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி இவை இரண்டில் எது கூடுதல் தொகையோ அதுவே உறுதி செய்யப்படும்.

8) உரிமம் உறுதி பெற்றவர்கள் எக்காரணத்தைக் கொண்டும், அவ்வுரிமத்தை மாற்றம் (டிரான்ஸ்பர்) செய்யவோ, அல்லது பினாமியாக நடத்தவோ உரிமை இல்லை. மேலும் தன் விருப்பப்படி உரிமத்திலிருந்து விடுபடவும் உரிமை இல்லை.

9) உரிமம் இனங்களுக்கு வருமான வரியினை நடமுறைவிதிகளின்படி உரிமத்தொகைக்கு கணக்கிட்டு உரிமத்தொகையுடன் சேர்த்து திருக்கோயிலுக்குச் செலுத்த வேண்டும்.

10) ஒவ்வொரு உரிமத்தையும் திருக்கோயில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் மட்டுமே நடத்திக் கொள்ள வேண்டும். திருக்கோயிலிலிருந்து நிர்ணயம் செய்யப்பட்ட விலைப்பட்டியல் வைக்க வேண்டும். கூடுதல் தொகைக்கு விற்பனை செய்யக்கூடாது.

11) திருக்கோயில் நலனுக்காக எதிராக செயல்பட்டவர்களும், செயல்படுவதாக கருதப்படுபவர்களும் முன்பாக்கி வைத்திருப்பவர்களும் திருக்கோயில் பாக்கிக்காக தீர்ப்பு, கடனாளி என்று அறிவிக்கப்பட்டவரும் பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

12) திருக்கோயில் நிர்ணயிக்கும் இடத்தில்தான் உரிமதாரர் அவ்வுரிமத்தை நடத்திக் கொள்ள வேண்டும். திருக்கோயில் நலன்கருதி உரிமம் பெற்றவர்களுக்கு தற்போது ஏலம் விட்ட இடத்திற்கு பதிலாக வேறு மாற்று இடம் கொடுக்க நிர்வாகத்திற்கு உரிமை உண்டு. இதை ஆட்சேபிக்க உரிமம் பெற்றவர்களுக்கோ வேறு யாருக்கும் உரிமை கிடையாது.

13) ஏல முன்வைப்புத்தொகை செலுத்தாதவர்கள், இத்திருக்கோயிக்கு எந்த வகையிலும் பாக்கி உள்ளவர்கள், பாக்கி உள்ளவர்களுக்காக வேறுநபர்கள் பெயரால் அல்லது அவரது உறவினர் பெயரால் (தாய், தந்தை, மனைவி, மக்கள், சகோதரர்கள், மற்றும் பந்துக்கள்) கலந்து கொள்பவர்கள் கோயில் நன்மைக்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுபவர்கள் கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், வழக்கு தொடரப்பட்டவர்கள், ஆகியவர்களை பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளியின்போது கலந்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது. ஏல நடவடிக்கைகள் முடிவு செய்தபின்பு மேற்கண்ட நபர்கள் கலந்து கொண்டதாகத் தெரிய வந்தால், மேற்படி உரிமம் ரத்து செய்யப்படும்.

14) திருக்கோயில் அபிவிருத்தியைக் கருதி கட்டிடங்களில் மாறுதல் திருப்பணிகள்/அபிவிருத்திப் பணிகள் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால் உரிமம் காலத்தை ரத்து செய்தோ அல்லது வேறுகட்டிடத்தை மாற்றிக் கொடுத்தே இக்கட்டிடத்தை திரும்ப எடுத்துக் கொள்ள திருக்கோயிலுக்கு அதிகாரமுண்டு. இதில் உரிமதாரர் நஷ்டஈடு ஏதும் கோர உரிமையில்லை.

15) உரிமதாரர்கள் தங்களது பொறுப்பிலுள்ள பொருட்களுக்கு தீ விபத்து மற்றும் இதர இயற்கை பாதிப்பிலிருந்து தமது சொந்தப் பொறுப்பிலேயே காப்பீடு செய்து கொள்ள வேண்டும். அப்படி காப்பீடு செய்யாத பட்சத்தில் திருக்கோயிலிலிருந்து எவ்வித நஷ்ட ஈடும் வழங்கப்பட மாட்டாது. தீ விபத்து தடுக்கும் பொருட்டு, கட்டாயமாக தீயணைப்புக் கருவிகள் உரிம இடத்தில் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். கடைகள் மற்றும் இதர கட்டிடங்களில் எளிதில் தீப்பற்றக்கூடியவைகளை அமைத்து தீயினாலோ மற்றும் இயற்கை பாதிப்புகளுக்கோ உள்ளானால் திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பு ஏற்காது.

16) பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி உரிமம் உறுதியாகாதவர்களின் முன்வைப்புத்தொகை, பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை முடிந்தவுடன் திரும்பக் கொடுக்கப்படும்.

17) பொதுஏலம் /ஒப்பந்தப்புள்ளி செலுத்தப்படும் பிணை வைப்புத்தொகை, ஏல உறுதி பெற்றவருக்கு உரிம காலம் முடிந்தபிறகே திரும்ப கொடுக்கப்படும். அதற்கு திருக்கோயிலிலிருந்து வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.

18) வருமானவரி நிரந்தரக் கணக்கு எண் நகல் (PAN CARD) மற்றும் ஆதார் அட்டை நகல் உள்ளவர்கள் மட்டும் பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். மேலும் இவ்வுரிமத்திற்கு வருமான வரி 2%ஐ உரிமத்தொகையுடன் சேர்த்து செலுத்த வேண்டும்., ஜி.எஸ்.டிவரி 18% துறைக்கு செலுத்தவேண்டியது ஏலதாரரின் பொறுப்பாகும்.

19) முந்தைய பசலி உரிமதாரர்கள் 1431ம் பசலிக்கான வருமான வரி பாக்கி வைத்திருப்பவர்கள் 1432ம் பசலியில் பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள இயலாது.

20) உரிமதாரர்கள் தங்களது பொறுப்பில் விலைப்பட்டியல் வைக்க வேண்டும். பிரசாத ஸ்டால் உரிமதாரர்கள் நடப்பாண்டுக்கு (01.07.2022 முதல் 30.6.2023 வரை செல்லத்தக்க) FSSAI சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும், உரிமதாரர்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு 1432ம் பசலிக்கு ரூ.10,000/– வீதம் பயன்பாட்டுக் கட்டணம் (Use and Occupation) செலுத்த வேண்டும்.

21) ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியே ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்று அதற்கான ஒப்பந்தப்புள்ளி தொகையை தனித்தனியே குறிப்பிட வேண்டும். ஒரு ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இனத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் குறிப்பிடப்படுமாயின் அவ்வொப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

22) மேற்படி வாடகை உரிமம் சென்னை, இந்துசமய அறநிலையத்துறை, ஆணையர் இரத்து / அங்கீகாரத்திற்கு உட்பட்டது.

23) உரிமத்தைப் பெற்றவர் உள்வாடகை விட்டாலோ அல்லது சட்டத்திற்கு புறம்பான தொழில் செய்தாலோ அல்லது லாகிரி போன்ற இதர போதை பொருட்கள் விற்பனை செய்தாலோ உரிமம் இரத்து செய்யப்படும்.

24) ஒப்பந்தப்புள்ளி/பொதுஏலத்தில் கலந்து கொள்பவர்கள் இதற்கான இனங்களை பார்வையிட்டப் பின்னரே கலந்து கொண்டதாகக் கருதப்படுவர். மேலும் ஒப்பந்தப்புள்ளி/பொதுஏல நிபந்தனைகளை படித்தும் கேட்டும் அறிந்து கொண்டதாகவும் கருதப்படுவர்.

25) ஒப்பந்தப்புள்ளி/பொதுஏலத்தில் கலந்து கொண்டவர்களில் உயர்ந்த கேள்விதாரருக்கே ஒப்பந்தப்புள்ளி/பொதுஏல நடவடிக்கை முடிக்கப்படும். இதர நபர்களுக்கு அவர்களின் டெபாசிட் தொகை திரும்ப வழங்கப்படும்.

26) உரிமதாரர் தம் சொந்த செலவில் உரிம ஒப்பந்தப்பத்திரம் எழுதித் தர வேண்டும். உரிம இனத்திற்கான மின் கட்டணத்தை உரிமதாரரே செலுத்த வேண்டும்.

27) நிர்வாக காரணங்களினாலோ அல்லது திருக்கோயில் நலன் கருதியோ , உரிம இனத்தை காலிசெய்து கொடுக்கவும் ஒப்படைக்கவும் கேட்கப்படும் நிலையில் மறுக்காது ஒப்படைக்க வேண்டும்.

28) தெய்வம், இயற்கை மற்றும் அரசு ஆகியவைகளினால் ஏற்பட்ட இழப்பிற்கு திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பேற்காது.

29) உரிமகாலம் 30.06.2023ல் முடிவடைந்தவுடன் திருக்கோயிலுக்குச் சொந்தமான இந்த உரிம இனங்கள் தானாக திருக்கோயில் சுவாதீனத்திற்கு வந்துவிடும். இதை மறுக்கவோ தடுக்கவோ யாருக்கும் உரிமை இல்லை.

30) ஒப்பந்தப்புள்ளி/பொதுஏல நிபந்தனைகள் நிர்வாகத்தின் கூடுதல் சேர்ப்பிற்கும், மாற்றத்திற்கும் உட்பட்டது இதை மறுக்க யாருக்கும் உரிமை இல்லை.

31) ஒப்பந்தப்புள்ளி/பொதுஏலத்தை நிர்வாக காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கவோ/தள்ளி வைக்கவோ உதவி ஆணையர்/செயல்அலுவலருக்கு முழு உரிமை உண்டு.

32) துலாபாரத்தில் காணிக்கையாக வரப்பெறும் பச்சரிசி, புழுங்கல்அரிசி, ம.வெல்லம், கல்கண்டு, கருப்பட்டி, ஜீனி, அச்சுவெல்லம், பாசிப்பருப்பு, பாசிப்பயறு, அவுல்,கோதுமைமாவு, நெல், நாட்டுச்சர்க்கரை, கடலைப்பருப்பு, கிஸ்மிஸ், பேரீச்சம்பழம், நெய், காய்,கனி வர்க்கங்கள், எண்ணெய் வகைகள் மற்றும் முந்திரி பருப்பு ஆகியவைகளைஓராண்டுக்கு மட்டும் (01.07.2022 முதல் 30.6.2023 வரை) சேகரமாவதை எடுத்துக் கொள்ளும் உரிமமாகும்.

33) ஏலத்தின் பொழுது கேள்வித்தொகை திருக்கோயில் மதிப்பிற்கு மேல் கேட்கப்படும் பட்சத்தில், செலுத்திய டெபாசிட் தொகைக்கு மேல் உள்ள கேள்வித்தொகையை உடன் ரொக்கமாக செலுத்திய பிறகே மேற்கொண்டு ஏலத்தில் தொடர்ந்து கேள்வி கேட்க அனுமதிக்கப்படும்.

34) மேற்படி வரப்பெறும் துலாபாரம் காணிக்கை பொருட்களை அன்னதானத்திற்கு மாதம் 1க்கு தேவையான 28/35 கிலோ ம.வெல்லம் திருக்கோயிலுக்கு இலவசமாக வழங்க வேண்டும். அதேபோல் திருக்கோயிலின் படித்தரத்திற்கு தேவையான பச்சரிசி போன்ற இதர பொருட்களை அரசு விலையில் திருக்கோயிலுக்கு வழங்க வேண்டும்.

35) இதர நிபந்தனைகளை ஒப்பந்தப்புள்ளி /பொதுஏலத்தின்போது கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

## பலவகை இன பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்.

### 1. தேங்காய், பழம் மற்றும் பூஜைப் பொருட்கள் விற்பனை உரிமம்.

ஒவ்வொரு உரிமத்தை திருக்கோயில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் மட்டுமே நடத்திக் கொள்ள வேண்டும். திருக்கோயில் நிர்ணயம் செய்யப்பட்ட விலைப்பட்டியல் வைக்க வேண்டும். கூடுதல் தொகைக்கு விற்பனை செய்யக்கூடாது.

| வ.எண் | இனம் | எண்ணிக்கை | விலை ரூ. |
|---|---|---|---|
| 1. | தேங்காய் | 1 | |
| 2. | வாழைப்பழம் | 2 | |
| 3. | ஊதுபத்தி | 1 பாக்கெட் | 30.00 |
| 4. | சூடம் | 1 பாக்கெட் | |
| 5. | வெற்றிலைச் சுருள் | 1 | |

| வ. எண் | இனம் | எண்ணிக்கை | விலை ரூ. |
|---|---|---|---|
| 1. | தேங்காய் | 1 | |
| 2. | வாழைப்பழம் | 2 | |
| 3. | ஊதுபத்தி | 1 பாக்கெட் | |
| 4. | சூடம் | 1 பாக்கெட் | 50.00 |
| 5. | வெற்றிலைச் சுருள் | 1 | |
| 6. | துளசி மாலை | 1 | |
| 7. | தாமரைப் பூ | 1 | |

2) உரிமம் சம்மந்தப்பட்ட வகையில் விற்பனை வரி, மாநகராட்சி வரி, வருமான வரி, மற்றும் தொழில்வரி, ஏதேனும் செலுத்த நேர்ந்தால் அதை சம்மந்தப்பட்ட உரிமைதாரரே தமது சொந்தப்பொறுப்பில் செலுத்த வேண்டும்.

3) வருகின்ற பக்தர்களிடம் இனிமையாகவும், கனிவாகவும் மேலும் அன்புடனும் நடந்துகொள்ள வேண்டும்.

4) கடையில் விற்பனைக்கு நியமிக்கப்படும் தொழிலாளர்கள் இந்துக்களாக இருக்க வேண்டும். சிறுவர்களை வேலைக்கு அமர்த்தக்கூடாது.

5) விலைப்பட்டியல் பொதுமக்களுக்கு தெரியக்கூடிய வகையில் வைத்தல் வேண்டும். விற்பனை செய்யக்கூடிய பூஜை பொருட்கள் தரமுள்ளதாக இல்லை என்றோ, அதிக விலைக்கு விற்பனை செய்வதாகவோ, புகார் வரப்பெற்றறாலும், திருக்கோயில் புனிதத்தன்மையைப் பாதிக்கும்படி விற்பனை செய்வதாக புகார் வரப்பெற்றாலும் உரிமத்தை ரத்து செய்து பொது ஏலத்திற்கு கொண்டுவரப்படும்.

6) உரிம இனங்களைத் தவிர, இதர இனங்களையோ பிற உரிமை இனங்களையோ வைத்து விற்பனை செய்யக்கூடாது. மற்றும் பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி ஏல அறிவிப்பில் காணும் பொதுநிபந்தனையின்படி செயல்பட வேண்டும்.

7) பாலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தவோ பக்தர்களுக்கு விநியோகிக்கவோ கூடாது. பயன்படுத்துவது தெரிந்தாலோ, புகார் வரப்பெற்றாலோ உடன் உரிமத்தை ரத்து செய்து பொது ஏலத்திற்கு கொண்டுவரப்படும்.

### II) பிரசாத விற்பனை உரிமம்.

1) பிரசாத விற்பனை உரிமத்தைப் பெற்றவர் பிரசாதங்களை தரமான பொருட்களைக் கொண்டு மிகவும் தூய்மையான முறையில் தேவஸ்தானத்தில் ஒதுக்கப்படும் இடத்தில் பிரசாதங்களை விற்பனை செய்ய வேண்டும். பிரசாதக் கடைகளுக்கு திருக்கோயில் நிர்வாகம் நிர்ணயிக்கும் மின் கட்டணத்தை மாதம்தோறும் செலுத்த வேண்டும். தவிர, தினசரி தயாரிக்கப்படும் எல்லா வகை நிவேதனத்தையும் பரிசோதனை செய்யும் வகையில் ஒரு செட் பிரசாதத்தை இலவசமாக அலுவலகத்தில் கொடுக்க வேண்டும்.

2) பிரசாத ஸ்டாலில் கீழே குறிப்பிட்ட பிரசாதங்கள் தவிர வேறு எந்தப் பொருட்களும் விற்பனை செய்யக்கூடாது.

| வ.எண் | விபரம் | எடை / கி.கிராம் ரூ. பை | விலை 1க்கு ரூ. பை |
|---|---|---|---|
| 1. | லட்டு | 0.050 | 10.00 |
| 2. | ரவாலட்டு | 0.050 | 10.00 |
| 3. | பால் லட்டு | 0.050 | 10.00 |
| 4. | அதிரசம் | 0.050 | 10.00 |
| 5. | தேங்குழல் | 0.050 | 10.00 |
| 6. | முறுக்கு | 0.050 | 10.00 |
| 7. | சர்க்கரைப் பொங்கல் | 0.100 | 10.00 |
| 8. | புளியோதரை | 0.100 | 10.00 |
| 9. | வடை | 0.050 | 5.00 |
| 10. | வெண்பொங்கல் | 0.100 | 10.00 |
| 11. | அப்பம் | 0.050 | 10.00 |
| 12. | சம்பாசாதம் | 0.100 | 10.00 |
| 13 | அடைதோசை | 0.200 | 25.00 |

மேற்கண்ட விபரப்படி எடை, விலை, நிர்ணயித்து பிரசாதம் விற்பனை செய்ய வேண்டும்.

3) பிரசாதம் தயாரிக்க பயன்படுத்தப்படும் எண்ணெய் மற்றும் நெய் ISI முத்திரையிடப்பட்ட தரமானதாக இருக்க வேண்டும். மேலும் Food safety and Standard Act, Weight and Measures Act, Packaged Commodities Act பிரிவுகளின் படியான நெறிமுறைகளை பின்பற்றப்பட வேண்டும்.

4) பிரசாதக் கடைகளில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் தயார் செய்யப்பட்ட தேதி (Date of Maufacture ) பயன்படுத்தக்கூடிய காலம் (Date of Expiry or Best of Before ) எடை மற்றும் விலை ஆகியவை குறிப்பிட வேண்டும். புளிசாதம், தயிர்சாதம் கொட்டுப்போகாமல் இருக்க வேண்டும். விற்கப்படும் பொருட்களில் காலாவதி தேதி முடிந்த பிறகு விற்பனை செய்யக்கூடாது. அவ்வாறு விற்பனை செய்து சேவார்த்திகளுக்கு ஏதாவது உடல்நலக் குறைபாடு ஏற்படின், உரிமத்தை பெற்றவரையே முழுப்பொறுப்பாக்கி உடனடியாடி உரிமம் ரத்து செய்யப்பட்டு, அவர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும்.

5)பிரசாதங்கள் விற்பனை இடத்திற்கு வெளியே தீயணைப்புக் கருவி மற்றும் முதல் உதவிப்பெட்டி இருக்க வேண்டும்.

6) பிரசாதங்கள் ஆலய நடைமுறையில் பழக்க வழக்கங்களின்படி தயார் செய்யப்பட்டு சுவாமிக்கு நிவேதனம் செய்யப்பட்ட பின்பே விற்பனை செய்ய வேண்டும்.

7) அ) உரிமம் பெற்றவர் பிரசாதம் விற்பனை செய்யும் இடத்தில் சொந்தப் பொறுப்பில் விளம்பரப் பலகை வைத்து அதில் குத்தகைதாரரின் பெயரில் சேவார்த்திகள் அறியும் வகையில் எழுதி வைக்க வேண்டும். மேலும் விற்பனை இடத்தில் பிரசாதங்கள் எடை விபரம், விலை விபரம் முதலியவற்றை சேவார்த்திகளுக்கு நன்கு தெரியும் வகையில் அறிவிப்புப் பலகையில் தமது சொந்தப் பொறுப்பில் எழுதி வைக்க வேண்டும்.

ஆ) விற்பனை செய்யும் பிரசாதங்களை பிளாஸ்டிக் பையில் வைத்து அடைத்துத் தரப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். தமிழ்நாடு அரசு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டபடியான உரிய தரமான பொருட்களால் ஆன பைகளில் போட்டு விற்கப்பட வேண்டும். செய்தித்தாளில் பிரசாதம் மடிக்கப்படக்கூடாது. 40 மைக்கரான்களுக்கு மேல் உள்ள நெகிழி பயன்படுத்தலாம்.

8) புரட்டாசி சனிக்கிழமைகள், வைகுண்ட ஏகாதசி மற்றும் விஷேச நாட்களில் சேவார்த்திகள் கோவிலுக்குள் பிரசாதம் கொடுப்பதை ஆட்சேபனை செய்யக் கூடாது.

10)சேவார்த்திகள் என்ன பிரசாதம் கேட்கிறாரகளோ, அதை மட்டும் தான் வழங்க வேண்டும். சில பிரசாத வகைகளை ஒன்று சேர்த்து அப்படித்தான் மொத்தமாக பிரசாதம் வாங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தக்கூடாது. பக்தர்களிடம் பண்பாக நடந்துகொள்ள வேண்டும்.

9) மேற்படி விற்பனை செய்யப்படும் பிரசாதங்களை அவ்வப்போது ஆய்வு செய்ய உதவி ஆணையர்/செயல் அலுவலருக்கோ அல்லது அவரால் அதிகாரம் பெற்ற நபருக்கோ பூரண உரிமை உண்டு.

10) மதுரை மாநகராட்சி சுகாதார ஆய்வுக்குட்பட்டது.

11) கெட்டுப்போன மற்றும் நாள்பட்ட பிரசாதங்கள் விற்பனை, தரமில்லா பொருட்களைப் பயன்படுத்தி பிரசாதங்கள் தயாரித்தல், விலைப்பட்டியல் பலகை வைக்காமல் இருத்தல், அதிக விலைக்கு விற்றல் போன்றவைகள் புகாராகவோ, ஆய்வின்போதோ கண்டறியப்படும்போது எவ்வித கணக்கமும் இல்லாமல் தங்களது உரிமம் ரத்துசெய்யப்படும்.

III) பக்தர்களின் ஊர்திகள் பாதுகாப்புக் கட்டணம் வசூல் உரிமம்.

1) திருக்கோயிலுக்கு வரும் வாகனங்களுக்கு கீழ்க்காணும் விபரப்படி கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

| வ.எண் | இனங்களின் விபரம் | விலை ரூ. பை |
|---|---|---|
| 1 | சைக்கிள் 1க்கு | 3.00 |
| 2. | மோட்டார் சைக்கிள் 1க்கு | 5.00 |
| 3. | கார், வேன், டாடா சுமோ, | 20.00 |
| 4. | மினி பஸ், டிராக்டர், மற்றும் கனரக வாகனங்கள். | 30.00 |

2) இந்த உரிம வகைக்கு உரிமைதாரர் வாகனங்களுக்கு ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக கலர்த்தாள்களில் முறையான வரிசை எண்கள் விபரம், குறிப்பிட்டு கட்டணச் சீட்டுக்களை கொடுக்க வேண்டும். அந்தக் கட்டணச் சீட்டுக்களை தமது சொந்தப் பொறுப்பிலேயே அச்சடித்து திருக்கோயில் அலுவலக முத்திரை பெற்று சான்று பெற்ற பின்னரே உபயோகிக்க வேண்டும்.

3)திருக்கோயில் அதிகாரிகள் திடீரென ஆய்வு செய்யும்பொழுது மேற்கண்ட விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். கடைப்பிடிக்கப்படவில்லை என்றால் உரிமம் ரத்து செய்யப்படும்.

4)கட்டணம் வசூலிக்கும் இடங்களில் உரிமைதாரரோ அல்லது அவரது சிப்பந்திகளோ எவ்விதமான பொருட்களையும் வைத்து விற்பனை செய்யக்கூடாது. இதை மீறி முயற்சித்தால் உரிமையினை முன்னறிவிப்பின்றி உரிமம் ரத்து செய்ய திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

5) இவ்வுரிமத்தை எடுத்தவர் நாள் 1க்கு சுமார் 12 மணிநேரம் கட்டணத் தொகையை வசூலித்துக் கொள்ள வேண்டும்.

6)இவ்வுரிமத்தை எடுத்தவர் திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் அறநிலையத்துறை அலுவலர்கள் ஆகியோர்களின் ஊர்திகளுக்கு கட்டணம் ஏதும் வசூலிக்கக்கூடாது.

7)பக்தர்களின் கூட்டம் கூடுதலாக உள்ள வைகுண்ட ஏகாதசி, மற்றும் புரட்டாசி சனிக்கிழமை போன்ற திருவிழாக் காலங்களில் காவல்துறை அதிகாரிகள் குறிப்பிடும் இடத்தில்தான் பக்தர்களின் ஊர்திகளை நிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். இதுபோன்ற தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் திருக்கோயில் நிர்வாகம் தலையிட முடியாது.

8)திருக்கோயிலுக்கு வரும் சைக்கிள், கார், இருசக்கர வாகனம் தொலைந்தால் தங்களது சொந்தச் செலவிலேயே அவர்களுக்கு வாங்கிக் கொடுத்துக்கொள்ள வேண்டும். இதில் திருக்கோயில் நிர்வாகம் தலையிடாது.

9) மேற்படி கட்டணம் வசூலிக்கப்படும் இடத்தில் வசூலிக்கப்படும் கட்டணங்கள் குறித்து விளம்பரப் பலகை உரிமைதாரர் பொறுப்பில் வைக்க வேண்டும். தவறினால் திருக்கோயில் சார்பில் விளம்பரம் செய்து நஷ்ட ஈடு வசூலிக்கப்படும். விளம்பரப் பலகையில் உள்ள வாசகங்களை மறைக்கும் வகையில் எந்தவித அமைப்பும் ஏற்படுத்தக்கூடாது. மற்றும் பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் காணும் பொதுநிபந்தனைகளின்படியும் செயல்பட வேண்டும்.

IV) துலாபாரம் காணிக்கை பொருட்கள் சேகர உரிமம்.

1) துலாபாரத்தில் காணிக்கையாக வரப்பெறும் பச்சரிசி, புழுங்கல்அரிசி, ம.வெல்லம், கல்கண்டு, கருப்பட்டி, ஜீனி, அச்சுவெல்லம், பாசிப்பருப்பு, பாசிப்பயறு, அவுல்,கோதுமைமாவு, நெல், நாட்டுச்சர்க்கரை, கடலைப்பருப்பு, கிஸ்மிஸ், பேரீச்சம்பழம், நெய், காய்,கனி வர்க்கங்கள், எண்ணெய் வகைகள் மற்றும் முந்திரி பருப்பு ஆகியவைகளை ஒராண்டுக்கு மட்டும் (1432பசலி) சேகரமாவதை எடுத்துக் கொள்ளும் உரிமமாகும்.

2) மேற்படி வரப்பெறும் துலாபாரம் காணிக்கை பொருட்களை அன்னதானத்திற்கு மாதம் 1க்கு தேவையான 28/35 கிலோ ம.வெல்லம் திருக்கோயிலுக்கு இலவசமாக வழங்க வேண்டும். அதேபோல் திருக்கோயிலின் படித்தரத்திற்கு தேவையான பச்சரிசி போன்ற இதர பொருட்களை அரசு விலையில் திருக்கோயிலுக்கு வழங்க வேண்டும்.

3) துலாபார காணிக்கையாக வரப்பெறும் பொருட்களுக்கு உரிய இரசீதினை திருக்கோயில் மூலம் வழங்கப்பட்ட பின்னரே, உரிமதாரர் சேகரம் செய்துகொள்ள வேண்டும். இரசீது இல்லாத துலாபாரக் காணிக்கைப் பொருட்களை சேகரம் செய்யக்கூடாது.

4) துலாபார காணிக்கை பொருட்களை உரிமதார சேகரித்து தம் சொந்தப் பொறுப்பில் வைத்துக் கொள்ள வேண்டும். திருக்கோயில் பாதுகாப்பில் வைத்துக் கொள்ளக்கூடாது.

5) சேகரம் செய்யப்பட்ட பொருட்களுக்கு இயற்கை மற்றும் இதர வகையில் சேதமோ அல்லது இழப்போ ஏற்படின், உரிமதாரர் மட்டுமே பொறுப்பாவார். அதற்கு திருக்கோயில் எவ்வகையிலும் பொறுப்பேற்காது.

V) <u>நவக்கிரக சன்னதிமுன் எள்ளுச்செண்டு மற்றும் நெய்தீபம் விற்பனை உரிமம்.</u>

1) எள்ளுச்செண்டு மற்றும் நெய்தீபம் உரிமத்தை எடுத்தவர் கீழ்க்கண்ட பட்டியல்படி விற்பனை செய்ய வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் கூடுதல் விலைக்கு விற்கக்கூடாது.

| வ.எண் | இனம் | எடை அளவு | விலை ரூ. பை. |
|---|---|---|---|
| 1 | எள்ளுச்செண்டு 1க்கு | 1 ½ ஸ்பூன் | 5.00 |
| 2. | நெய்தீபம் 1க்கு | 4 ஸ்பூன் | 10.00 |
| 3. | பெரிய சட்டி எள்ளுவிளக்கு 1க்கு | 4 ஸ்பூன் | 10.00 |
| 4 | சிறிய நெய்விளக்கு 1க்கு | 1 ½ ஸ்பூன் | 5.00 |
| 5 | நெய்விளக்கு 1க்கு | 80ml | 20.00 |
| 6 | நெய்விளக்கு 1க்கு | 150ml | 40.00 |
| 7 | நெய்விளக்கு 1க்கு (மோட்ச விளக்கு) | 150ml | 80.00 |

2) எள்ளுச்செண்டு மற்றும் நெய்தீபம் விற்பனை செய்யும் இடத்தில் பக்தர்களின் பார்வையில் படும்படி விலை விபரப் பலகை வைக்கப்பட வேண்டும்.

3) நெய் மற்றும் இதர பொருட்கள் தரமானதாகவும், சுத்தமானதாகவும், தூய்மையானதாகவும் வைத்துக் கொள்ள வேண்டியது உரிமதாரரின் பொறுப்பாகும். நெய் மற்றும் எண்ணெய் தரமில்லாமல் இருந்தாலோ, மேற்படி அளவுகளில் உள்ள எண்ணெய், நெய் பயன்படுத்தாமல் இருந்தாலோ, விலை அதிகமாக விற்பனை செய்தாலோ உரிமம் ரத்து செய்யப்படும்.

4) திருக்கோயிலுக்குள் கொண்டுவரும் பொருட்களுக்கும், வெளியில் கொண்டுசெல்லும் பொருட்களுக்கும் திருக்கோயில் அலுவலகத்தில் முன் அனுமதி பெற வேண்டும்.

5) மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் மேற்படி உரிமம் முன்அறிவிப்பின்றி ரத்து செய்யப்பட்டு மறுஏலம் நடத்தப்படும். மறு ஏலம் நடத்துவதால் ஏற்படும் இழப்புகளுக்கு ஏலதாரரே முழுப் பொறுப்பாவார்.

6)காலி எள்ளுகிளியாஞ்சட்டியை திருக்கோயில் வளாகத்திற்குள் தீயிலிட்டு சுத்தம்செய்யக்கூடாது.

7) பக்தர்கள் புகாருக்கு இடமளிக்கா வண்ணம் நடந்து கொள்ள வேண்டும். திருக்கோயில் ஒதுக்கித்தரும் இடம் தவிர வேறுஇடங்களில் கடைகள் போட உரிமையில்லை. மேலும் விற்பனை செய்யும் இடத்தில் சொந்தச்செலவில் தீயணைப்பான் பொருத்தி தூய்மையாகப் பராமரிக்க வேண்டும். பக்தர்கள் தாங்களிடம்தான் விளக்கு வாங்க வேண்டும் என நிர்பந்திக்கக் கூடாது.

**VI) அருள்மிகு மங்கள ஆஞ்சநேயர் திருக்கோயில், நேதாஜி சாலை, மதுரை—1.**

துளசி, பூமாலை, வெற்றிலை மாலை மற்றும் நெய்தீபம் விற்பனை செய்து கொள்ளும் உரிமம்.

1) ஒவ்வொரு உரிமத்தை திருக்கோயில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் மட்டுமே நடத்திக் கொள்ள வேண்டும். திருக்கோயில் நிர்ணயம் செய்யப்பட்ட விலைப்பட்டியல் வைக்க வேண்டும். கூடுதல் தொகைக்கு விற்பனை செய்யக்கூடாது.

| வ.எண் | இனம் | எடை அளவு | விலை<br>ரூ. பை. |
|---|---|---|---|
| 1. | துளசி சரம் சிறியது | 1 ¼ முழம் | 5.00 |
| 2. | துளசி மாலை சிறியது | 2 ½ முழம் | 10.00 |
| 3. | வெற்றிலை மாலை | 1 எண்ணம் | 10.00 |
| 4. | பூமாலை சிறியது | 1 எண்ணம் | 20.00 |
| 5. | நெய்தீபம் 1க்கு | 1 ½ ஸ்பூன் | 5.00 |

2) உரிமம் சம்மந்தப்பட்ட வகையில் விற்பனை வரி, மாநகராட்சி வரி, வருமான வரி, மற்றும் தொழில்வரி, ஏதேனும் செலுத்த நேர்ந்தால் அதை சம்மந்தப்பட்ட உரிமைதாரரே தமது சொந்தப்பொறுப்பில் செலுத்த வேண்டும்.

3) வருகின்ற பக்தர்களிடம் இனிமையாகவும், கனிவாகவும் மேலும் அன்புடனும் நடந்துகொள்ள வேண்டும்.

4) கடையில் விற்பனைக்கு நியமிக்கப்படும் தொழிலாளர்கள் இந்துக்களாக இருக்க வேண்டும். சிறுவர்களை வேலைக்கு அமர்த்தக்கூடாது.

5) விற்பனை செய்யக்கூடிய பூஜை பொருட்கள் தரமுள்ளதாக இல்லை என்றோ, அதிக விலைக்கு விற்பனை செய்வதாகவோ, புகார் வரப்பெற்றாலும், திருக்கோயில் புனிதத்தன்மையைப் பாதிக்கும்படி விற்பனை செய்வதாக புகார் வரப்பெற்றாலும் உரிமத்தை ரத்து செய்து பொது ஏலத்திற்கு கொண்டுவரப்படும்.

6) நெய்தீபம் விற்பனை எக்காரணத்தைக் கொண்டும் கூடுதல் விலைக்கு விற்கக்கூடாது. நெய்தீபம் விற்பனை செய்யுமிடத்தில் பக்தர்களின் பார்வையில் படும்படி விலை விபரப்போர்டு வைக்கப்பட வேண்டும்.

7) பொருட்கள் தரமானதாகவும், சுத்தமானதாகவும், வைத்துக்கொள்ள வேண்டியது உரிமைதாரரின் பொறுப்பாகும்.

8) திருக்கோயிலுக்குள் கொண்டுவரும் பொருட்களுக்கும், வெளியில் கொண்டு செல்லும் பொருட்களுக்கும் திருக்கோயில் அலுவலகத்தில் முன்அனுமதி பெறவேண்டும்.

9) உரிம இனங்களைத் தவிர, இதர இனங்களையோ பிற உரிமை இனங்களையோ வைத்து விற்பனை செய்யக்கூடாது. மற்றும் மறுபொதுஏலம்/மறுஒப்பந்தப்புள்ளி ஏல அறிவிப்பில் காணும் பொதுநிபந்தனையின்படி செயல்பட வேண்டும்.

10) பாலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தவோ பக்தர்களுக்கு விநியோகிக்கவோ கூடாது.

11) இதர நிபந்தனைகள் ஏதுமிருப்பின் ஏலத்தின்போது அறிவிக்கப்படும்.

மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் மேற்படி உரிமம் முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்பட்டு மறுஏலம் நடத்தப்படும். மறுஏலம் நடத்துவதால் ஏற்படும் இழப்புகளுக்கு முன் ஏலதாரரே முழுப் பொறுப்பாவார்.

மு.இராமசாமி எம்.ஏ.,
தக்கார்

மு.விஜயன் பி.எஸ்ஸி.,பி.எல்.,
உதவி ஆணையர்/செயல் அலுவலர் (கூ.பொ)

இடம் .. மதுரை
நாள் .. 06 05.2022

டெஸ்க்டாப் அ4
1432 palavagai tender